# பாடம் - 01

# தாயுமானவர் கதை

1. சைவ சமயத்தவர்களின் கடவுள் பற்றிய நம்பிக்கைகள் எவை?
    - கடவுள் உயிர்கள் அனைத்திற்கும் மேலானவர்.
    - கடவுள் ஒருவரே உண்மையானவர்
    - கடவுள் கருணை உள்ளம் கொண்டவர்
    - கடவுள் மீது பக்தி கொள்கின்றவர்களுக்கு என்றும் துன்பம் இல்லை.ஏனெனில் இறைவன் வேண்டிய வடிவில் வந்து அருள்பாலிப்பார்
    - இறைவனே தாயும் தந்தையும் ஆவார்.

2. கடவுளை நம்பி பக்தி கொண்டவர்கள் என்றும் துன்பம் அடைந்ததில்லை என்பதை எவ்வாறு அறியமுடிகிறது?
    - சைவ அருளாளர்களின் வாழ்வியல் மூலம் அறியமுடிகிறது

3. மூதாட்டி எங்கே வாழ்ந்து வந்தார்?
    - திருவாணைக்காவில்

4. மூதாட்டியின் இறை தொண்டு யாது?
    - கடவுள் மீது மிகுந்த பக்தி கொண்டவர்
    - திருச்சிராப்பள்ளி இறைவனுக்கு பூமாரை கட்டிக் கொடுக்கும் திருத்தொண்டினை தவறாது செய்து வந்தார்.

5. மூதாட்டியின் மகள் ஏன் தாய்வீட்டிற்கு வந்தாள்?
    - பிரசவத்திற்காக தன் தாயார் வீட்டிற்கு வந்தார்

6. மூதாட்டி செய்வதறியாது வேதனை அடைந்தமைக்கான காரணம் யாது?
    - ஒரு பொழுது மூதாட்டி வழமை போல திருச்சிராப்பள்ளி சிவன் ஆலயத்திற்குச் சென்று சாமிதரிசனம் முடித்துக் கொண்டு வீடு திரும்பும் வேளையில் காவிரியாறு பெருக்கெடுத்து ஓடிக்கொண்டு இருந்தது.மூதாட்டியால் ஆற்றைக் கடந்து செல்ல முடியவில்லை. ஓடக்காரர்களும் ஆற்றின் பெருக்குக்கு அஞ்சி ஓடத்தை செலுத்த முன்வராமையால் எவ்வாறு வீடு செல்வது என்று செய்வதறியாது வேதனைப்பட்டாள்.

7. திருச்சிராப்பள்ளியில் கோயில் கொண்ட இறைவன் பெயர் யாது?
    - குன்றுடையான்(சிவன்)

8. மூதாட்டியின் மகளை பெரிதும் வருத்தியவை எவை?
   - அம்மையாரின் வீடு தனிமையான ஓர் இடத்தில் இருந்தமை
   - அக்கம் பக்கம் வேறு யாரும் இல்லை
   - உதவிக்கு ஒருவரும் இல்லை
   - கோயிலுக்குச் சென்ற தாய் திரும்பவில்லை முதலான காரணங்கள்

9. வேறோர் மூதாட்டி அங்கு வந்து மகளுக்குச் செய்த பணிவிடை யாது?
   - அப் பெண்ணுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தாள்
   - பிரசவத்திற்கு உதவியமை
   - தாய்க்கும் குழந்தைக்கும் செய்ய வேண்டிய சுத்திகள் யாவற்றையும் செய்தார்.
   - மகளின் உணவு முதலிய தேவைகளையும் நிறைவேற்றினார்

10. காவிரி ஆற்றுப்பெருக்கு எத்தனை நாட்கள் வரை பாய்ந்தது?
    - மூன்று நாட்கள்
11. மூதாட்டி வீடு வந்ததும் பணி செய்த மூதாட்டியின் நிலை என்ன?
    - அதுவரைக்கும் பெருந்துணையாக இருந்து பணி செய்த மூதாட்டி திடீரென மறைந்து விட்டாள்
12. வீட்டுக்கு வந்த மூதாட்டி மகிழ்ச்சி அடைந்தமைக்கு காரணம் யாது?
    - மகளும் பேரக் குழந்தையும் சுகமாக இருப்பதைக்கண்டு மகிழ்ந்தார்.அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டார்

13. மூதாட்டி மகளிடம் எதைப்பற்றி கேட்டாள்?
    - உனக்கு பிரசவ காலத்தில் உதவி புரிந்தவர் யார்?என்று ஆவலோடு கேட்டார்.

14. உனக்கு பிரசவ காலத்தில் உதவி புரிந்தவர் யார்?என மூதாட்டி கேட்டதற்கு மகள் என்ன கூறினாள்?
    - அம்மா!ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்.நீங்கள் தானே எல்லாவற்றையும் இரவு பகலாக செய்தீர்கள்.இப்பொழுது யார் உதவி புரிந்தவர் என்று கேட்கிறீர்கள் என்று சற்றுப் பதற்றத்துடன் கூறினாள்.

15. மகள் கூறியதை கேட்ட மூதாட்டி எதை நினைத்தாள்?
    - இது நான் வணங்கும் சிவபெருமானின் திருவருட் செயல்தான்

16. இக் கதையில் இருந்து எமக்கு கிடைக்கும் படிப்பினை யாது?
    - கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

17. மூதாட்டி மகளுக்கு கூறிய விடயம் என்ன?

- திருச்சிராப்பள்ளியில் வீற்றிருக்கும் சிவபெருமானே ஒஉனக்கு வேண்டிய காலத்தில் தாயாக வந்து துணையாக இருந்தார். அதற்கு நீ எவ்வளவு தவம் செய்திருக்க வேண்டும் என்று கூறினார்

18. தாயாக வந்த திருச்சிராப்பள்ளி குன்றுடையானுக்கு வழங்கப்பட்ட பெயர் என்ன?
    - தாயுமானவர் சுவாமி
19. இக்கதை மூலம் சிவபெருமான்/இறைவன் பற்றி நாம் அறிந்து கொள்பவை எவை?
    - இறைவன் கருணை உள்ளவர்
    - இறைவனே மேலானவன் என்ற பரத்துவ தத்துவம்
    - இறைவனே தாயும் தந்தையும் ஆவார்.
    - சிவனே எங்கும் வியாபகமாக உள்ளார்
    - இறைவன் தாய்போல் எமக்கு உதவுபவர்.

## அலகுப் பரீட்சை 01

பகுதி – I

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01.மூதாட்டி எங்கே வாழ்ந்து வந்தார் ?

I. திருவானைக்கால்
II. திருச்சிராப்பள்ளி
III. அண்ணாமலை
IV. திருவற்றியூர்

02.சிவனாகிய குன்றுடையான் கோயில் கொண்ட இடம் எது?

I. சிதம்பரம்
II. திருச்சிராப்பள்ளி
III. அண்ணாமலை
IV. திருவற்றியூர்

03.தாயாக வந்து உதவிய சிவனுக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

I. தாய் அன்னை
II. தாய்க் கடவுள்
III. தாயுமானவர் சுவாமி
IV. அன்னை சுவாமி

04.திருச்சிராப் பள்ளியை ஊடறுத்துப் பாயும் ஆறு யாது?

I. கங்கை
II. ஐமுனை

III. நர்மதா
IV. காவிரி

05.சிவபெருமான் மகளுக்கு எவ்வடிவில் உதவி புரிந்தார்?

I. இளம்பெண்ணாக
II. சிறுமியாக
III. மூதாட்டியாக
IV. கிழவனாக

**தரப்பட்ட சொற்களை வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்புக**

(காவிரி ஆறு, குன்றுடையான், தாயுமானவர் சுவாமி, மாறாத பக்தி, உயிர்கள்)

06. கடவுள்..........................அனைத்திற்கும் மேலானவர்
07. கடவுள் மீது எவர்.......................கொள்கின்றாரோ அவருக்குத் துன்பம் வரும் போமு வேண்டிய வடிவில் வந்து அருள்புரிவார்.
08. திருச்சிராப்பள்ளிக்கும் திருவானைக்காலிற்குமிடையே..............உள்ளது
09. மூதாட்டி திருச்சிராப்பள்ளி..........................மீது பெரும்பக்தி கொண்டவர்
10. திருச்சிராப்பள்ளி குன்றுடையானுக்கு.....................எனும் திருநாமம் வழங்கப்பட்டு வருகிறது.

பகுதி – II

01.மூதாட்டி செய்த இறை பணி யாது?

02.சுவாமி தரிசனம் முடித்துத் திரும்பிய மூதாட்டி வீடு செல்ல முடியாமைக்கான காரணம் யாது?

03.திருச்சிராப்பள்ளிக்ள குன்றுடையானுக்கு தாயுமானவர் சுவாமி எனப் பெயர் வர காரணம் யாது?

04.மூதாட்டி செய்வதறியாது வேதனைப்பட்டு தனக்கு உதவும் படி யாரிடம் வேண்டினார்?

05.இக் கதையினூடாக நீங்கள் பெற்றுக்கொண்ட படிப்பினைகள் எவை?

# (02) பாடசாலையில் சைவம்

01.பாடசாலைகளின் வகுப்பறையில் சிறந்த கூற்றுக்களை காட்சிப் படுத்துவதனால் ஏற்படும் நன்மை யாது?

- மாணவர்களை சிறந்த உளப்பாங்குடன் வளரச்செய்யும்

02.வகுப்பறையில் காட்சிப்படுத்தும் விடயங்கள் எவை?

- நாயன்மார்கள் பெரியார்களின் திருவுருவப் படங்கள்
- நீதிக்கருத்துக்கள் நிறைந்த வாக்கியங்கள்
- கருத்துரைகளுடன் கூடிய திருக்குறள்கள்
- கரும்பலகையில் தினமும் ஒரு குறள் எழுதுதல் சாலச்சிறந்தது

03.மாணவர்களின் உளப்பாங்கை மேலும் விருத்தி செய்ய சமயரீதியாக பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவை?

- நால்வர் குருபூசை சமயப் பெரியார் குருபூசை தினங்களில் அவர்களுக்கு விசேட ஆராதனை ஆற்றுதல்
- அவர்களது தொண்டுகளையும் செயற்கரிய செயல்களையும் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் சொற்பொழிவுகள் நாடகங்கள் வில்லுப்பாட்டுகளை நிகழ்த்துதல்

04.நவராத்திரி விரதத்தின் போது பாடசாலையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எவை?

- விசேட வழிபாடுகள் இடம்பெறும்
- கொலு வைத்தல்
- மாணவர்களிடையே பூமாலை கட்டுதல் கோலமிடுதல் பேச்சு நாடகம் நடனம் கட்டுரை பாவோதல் போன்ற போட்டிகள் இடம்பெறும்

05.மாணவரிடையே சமயம் சார்ந்த போட்டிகளை நடாத்துவதனால் ஏற்படும் நன்மைகள் எவை?

- எமது சமயப் பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் மாணவர்களிடையே விருத்தி செய்ய முடியும்

06.நவராத்திரி விழாவின் பத்தாம் நாள் விஜயதசமி அன்று நடைபெறுவது என்ன?

- ஏடு தொடக்கல்/வித்தியாரம்பம் இடம்பெறும்

07. நவராத்திரி மாணவர்களிடையே எதற்கு பெரிதும் உதவுகிறது?

- இறைபக்தியையும் கலைகளையும் வளர்க்க பெரிதும் உதவுகிறது

08.பாடசாலை நிறைவுறும் வேளையில் பாணவர்களின் செயற்பாடு யாது?

- வகுப்பறைகளில் அமைதியாக எழுந்து நின்று பயபக்தியுடன் திருமுறைகளை ஓத வேண்டும்
- பின்னர் ஒனருவர் பின் ஒருவராக வரிசையாக அமைதியுடன் வகுப்பறைகளில் இருந்து வெளியே செல்ல வேண்டும்

09.சமயங்கள் எத்தகையவை?

- மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்துக் கொடுப்பது அதாவது மனித வாழ்வினை நெறிப்படுத்தி அழைத்துச் செல்லும் உன்னதமான பாதையாகும்

10.பாடசாலை என்பது யாது?

- சிறந்த நற்பண்புகளுள்ள மனிதர்களைத் தோற்றுவிக்கும் நிலையங்களாகத் திகழ்பவையே பாடசாலை ஆகும்

11.பாடசாலையில் ஒழுக்கத்தின் காரணமாக எவை முக்கியம் பெறுகிறது?

- சமய ஒழுக்கங்களும் சமயப் பாரம்பரியங்களும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன

12.மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கும் முறை யாது?

- மாணவர்கள் வைகறையில் துயிலெழுந்து புறத்தூய்மைக்கு நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து விபூதி தரித்து உரிய நேரத்திற்கு முன்பாகவே பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும்

13.மாணவர்கள் பாடசாலையில் செய்யத்தகும் செயற்பாடுகள் எவை?

- பாடசாலை சுற்றுப் புறச்சூழலை சுத்தமாக வைத்திருத்தல்
- பாடசாலையில் பூமரக் கன்றுகளை நாட்டுதல் அவற்றை பசுமையாக பேணுதல்

14.தூய்மையாக சூழலை வைத்திருப்பதன் அடிப்படை நோக்கம் யாது?

- தூய்மையே தெய்வீக அருளைத் தோந்றுவிக்கும்

15.பாடசாலை ஆரம்பமாகும் பொழுது செய்ய வேண்டிய சமய விடயம் யாது?

- அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் ஒன்று கூடித் தோத்திரப் பாடல்களை பண்ணுடன் இசைத்து மனமுருகி இறைவனைப் பிரார்த்தனை செய்தல் வேண்டும்
- ஆசிரியர்களாலோ மாணவர்களாலோ நற்சிந்தனை ஆற்றப்பட வேண்டும்

16.மாணவர்கள் பாடசாலைகளில் தோத்திரங்களை பாடுவதால் ஏற்படும் நன்மைகள் எவை?

- கோயில்களிலும் வேறு விசேட வைபவங்களின் போதும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான இயலுமையை வளர்த்துக் கொள்ளக் கூடியதாக அமையும்

17.தேவாரங்கள் எங்கே கிடைக்கப் பெற்றன?

- தில்லைச் சிற்றம்பலம்/சிதம்பரம்

18. “திருச்சிற்றம்பலம்” சொல்வதன் நோக்கம் யாது?

- தேவாரத் திருவேடுகள் தில்லைச் சிற்றம்பலத்தில் கிடைக்கப்பெற்றமையை உணர்த்தும் வகையில் “திருச்சிற்றம்பலம்” சொல்லுதல் இன்றியமையாததாக காணப்பட்டது

19.“திருச்சிற்றம்பலம்” எப்போது சொல்லதல் வேண்டும்?

- தேவாரம் ஓதுவதற்கு முன்பும் ஓதிய பின்னரும் சொல்லுதல் வேண்டும்

20.வாரத்தில் சைவர்களுக்கு புனித நாளாக அமைவது எது?

- வெள்ளிக்கிழமை

21.பாடசாலையில் நடைபெறும் விசேட விழாக்கள் எவை?

- அடிக்கல் நாட்டுதல்
- கட்டட திறப்பு விழா
- சிறுவர் தினம்
- ஆசிரியர் தினம்
- பாமசாலை அபிவிருத்தி கூட்டங்கள்
- பரிசளிப்பு விழா
  முதலானவற்றிலும் சமயவழிபாட்டுக்கு முக்கியத்துவம் பொடுத்தல்

22.வெள்ளிக்கிழமைகளில் சைவர்கள் பொதுவாக ஆற்ற வேண்டும்?

- அதிகாலையில் எழுந்து உடல் தூய்மை செய்தற் பொருட்டு நீராடி தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து கோயிலுக்குச் செல்லுதல் உத்தமமாகும்
- விரதம் அனுஸ்டித்தல்
- பஞ்ச புராணம் சிவப்புராணம் ஓதுதல்

23. வெள்ளிக்கிழமைகளில் பாடசாலைகளில் செய்ய வேண்டிய சமய விடயங்கள் எவை?

- மாணவர் மிகத் தூய்மையாக வருதல்
- விபூதி தரித்திருத்தல் வேண்டும்
- விசேட வழிபாடு ஆற்றப்படுதல் வேண்டும்
- பஞ்ச புராணம் சிவப்புராணம் என்பன ஓத வேண்டும்

24.பஞ்ச புராணங்கள் எவை?

- தேவாரம்
- திருவாசகம்
- திருவிசைப்பா
- திருப்பல்லாண்டு
- திருப்புராணம்

.

**அலகுப் பரீட்சை 02**

பகுதி – I

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01.மாணவர்களிடையே நற்பண்புகளை வளர்க்கும் பண்புகளை நிலையமாக விளங்குவது எது ?

I. பாடசாலை
II. கோயில்
III. அரண்மனை
IV. கழகங்கள்

02.விஜயதசமி அன்று காலை நடைபெறும் நிகழ்வு யாது?

I. வாழை வெட்டு
II. ஏடு தொடக்கல்
III. பூசை
IV. காவடியாடல்

**பின்வரும் சொற்களை வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்புக**
(நீதிக்கருத்துக்கள் தோத்திரப்பாடல்கள் இறைபக்தி நற்பண்புகள்)

03. மாணவரிடையே சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்தும் வகையில் வகுப்பறைகளில்………………….. காட்சிப்படுத்தப்படல் வேண்டும்

04.பாடசாலையில் நவராத்திரி கொண்டாடப்படுவது மாணவரிடையே………………. வளர்க்க பெரிதும் உதவுகிறது

05.பாடசாலைகளில் காலைப் பிரார்த்தனைகளில்..........................பாடப்படுவது இன்றியமையாததாகும்.

**பகுதி – II**

01. பாடசாலையில் கொண்டாடப்படும் சைவ சமய விழாக்கள் எவை?

02. பாடசாலையில் சைவ சமயத்தினை வளர்க்கும் முகமாக தினந்தோறும் நிகழ்த்தப்படும் நிகழ்வுகள் இரண்டு தருக?

03. "திருச்சிற்றம்பலம்" சொல்லப்படும் சந்தர்ப்பங்களை தருக?

04. பாடசாலையில் விழாக்கள் கொண்டாடப்படுவதனால் மாணவர்கள் அடையும் நன்மைகள் எவை?

05. திருச்சிற்றம்பலம் சொல்வதன் நோக்கம் யாது?

# (03) பாடசாலையில் ஒழுக்கம்

01. மாணவர்களுக்கு ஒழுக்கம் ஏன் அவசியம்?
    - பாடசாலைக்கும், சமூகத்திலும் நற்பிரசையாக வாழ்வதற்கு
02. பாடசாலைக்குள் நடைபெறும் செயற்பாடுகளின் மூலமாக மாணவர் அடைய வேண்டிய நல்லொழுக்கங்கள் எவை?
    - பாடசாலைக்கு நேரத்திற்கு வருதல்
    - சுத்தம் பேணுதல்
    - பாடசாலையை நேசித்தல்
    - பாடசாலை ஒழுக்க விதிகளுக்கு மதிப்பளித்தல்
    - அதிபர், ஆசிரியர்களுக்கு கீழ்ப்டிதல்
    - காலைக்கூட்டத்தில் பங்கு கொள்ளல்
    - வெள்ளிக்கிழமை, விசேட காலங்களில் இடம்பெறும் கூட்டுப்பிராத்தனைகளில் பங்கு கொள்ளல்
    - மாணவ தலைவர்களுடனும், சக மாணவர்களுடனும் நட்புடன் இயைந்து நடத்தல்
    - பாடசாலைச் செயற்பாடுகளில் அப்பணிப்புடன் ஈடுபடுதல்
03. பாடத்தில் சந்தேகங்கள் ஏற்படும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
    - தங்களது முறை வரும் வரை காத்திருக்க வேண்டும்
    - எழுத்து இன்று ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்
    - பொருத்தமற்றவற்றை கேட்டு ஆசிரியரையும்,மாணவரையும் வீண் சிரமத்திற்கு உட்படுத்தக் கூடாது அத்தோடு காலவிரையம் ஏற்படும்
04. மாணவ தலைவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
    - பண்புடனும், அமைதியுடனும், மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்

- பாடவசாலையில் பணிபுரியும் ஊழியர்களுடன் அன்பாகவும், பண்பாகவும் பழகிக் கொள்ள வேண்டும்

05. பாடசாலை ஒரு கோயில் ஆதலால் அதனை எவ்வாறு வைத்திருத்தல் வேண்டும்?
    - பாடசாலைச் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்திருத்தல் வேண்டும்

06. பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் எவை?
    - பண்பாகவும் பணிவுடனும், நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அத்துடன் எரிச்சல், பொறாமை, போன்ற தீய குணங்களை விலக்க, அன்பும், பண்பும், பணிவும், நிறைந்த மாணவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

**அலகுப் பரீட்சை 03**

01. மாணவர்களுக்கு ஒழுக்கம் ஏன் அவசியம்?
    3வரி
02. பாடசாலை ஆரம்பமானவுடன் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் இரண்டினை தருக?
    4வரி
03. பாடசாலை நிறைவுறும் வேளையில் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் 2 தருக?
    4வரி
04. பாடசாலை ஒரு கோயில் ஆதலால் அதனை எவ்வாறு வைத்திருத்தல் வேண்டும்?
    5வரி
05. பாடசாலைக்குள் நடைபெறும் செயற்பாடுகளின் மூலமாக மாணவர் அடைய வேண்டிய நல்லொழுக்கங்கள் எவை?
    5வரி

# (04) வாழ்வியல் நற்பண்புகள்

01. மனிதவாழ்வு எவ்வாறு அமைதல் வேண்டும்?
    - மனித வாழ்வு மிக எளிமையான தன்மைளையும் உயர்வான எண்ணங்களையும் கொண்டதாக அமைய வேண்டும்
02. எத்தகைய வாழ்வு சிறந்தது?
    - மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் தன்னுயிர் போல் மன்னுயிரையும் பேணி, வாழும் வாழ்வே சிறந்தது.
03. நம் வாழ்வில் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நற்பண்புகள் எவை?
    - பணிவு
    - நன்றி மறவாமை
    - நீதி
    - பொறுமை
    - சகோதரத்துவம்
    - பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்தல்

## அ.பணிவு

04. மனிதனின் நற்குணங்களில் தனி சிறந்தது எது?
    - பணிவு
05. ஒருவருக்கு கல்வி செல்வம் பட்டம் பதவி இருந்தாலும் பணிவு இல்லையாயின் பயனில்லை எனக் கூறியவர் யார்?
    - திருவள்ளுவர்
06. பணிவு பற்றி வள்ளுவர் கூறும் குறள் எது?
    - “பணியுமாம் என்யும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து”
07. ஒருவருக்கு பணிவு இல்லாமைக்கு காரணம் எது?
    - அறியாமை
08. அறியாமையால் எமது உள்ளத்தில் ஏற்படுவது எது?
    - அகங்காரம்
09. பணிவை உண்டாக்க யாது செய்ய வேண்டும்?
    - உள்ளத்தில் வளரும் அகங்காரத்தை நீக்குதல் வேண்டும்
    - ஜாதி மதம் குலம் வறுமை வளமை ஆகிய எதையும் பார்க்காதீர்கள்
10. காட்டில் வசித்த முனிவரின் பண்பு யாது?
    - தன்னிடம் கற்க வரும் மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு பார்க்காதவர்கள்
11. முனிவரிடம் கல்வி கற்றவர் யார்?
    - முனிவர் வசித்த காட்டை ஒட்டி இருந்த நாட்டு மன்னனின் மகன் அதே குருகுலத்தில் கல்வி கற்றான்
12. கல்வி கற்றுத் தேர்ந்தவர்களுக்கு முனிவர் என்ன கூறினார்?
    - “உனக்கு குருகுலப்படிப்பு முடிந்தது. நீ போகலாம் ” என்று கூறுவர்
13. குருகுலத்தில் இருக்கும் கடப்பாடு என்ன?
    - முனிவர் சொல்லாமல் யாலும் குருகுலத்தை விட்டு செல்லக்கூடாது என்னும் கட்டுப்பாடு காணப்பட்டது
14. முனிவர் தனது குருகுலத்தில் உள்ள ஏனைய மாணவர்களை அனுப்பிவிட்டு யாரை வைத்திருந்தார்?
    - இராஜகுமாரனை
15. மகனை வீட்டுக்கு அனுப்பாமை கண்டு மன்னன் என்ன செய்தான்?
    - மகன் வருவான் எனப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு ஒரு நாள் புறப்பட்டு முனிவரிடம் வந்து “சுவாமி தங்களிடம் கல்வி பயின்ற எல்லா மாணவரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டதாக கேள்விப்பட்டன், ஆனால் எனது மகனை மட்டும் அனுப்பாமல் வைத்திருப்பதற்கு காரணம் என்ன? அவனுக்கு கல்வி ஏறவில்லையா? அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா? ” என்று வினவினான்
16. மன்னன் கேட்டதற்கு முனிவர் கூறியது என்ன?
    - நீங்கள் இங்கே சில நாட்கள் தங்கி இருக்க வேண்டும் என்றார்
17. முனிவர் கேட்டதற்கு மன்னன் என்ன செய்தான்?

- எவ்வித மறுப்பும் இன்றி முனிவரின் கட்டளையை மீற முடியாமல் மன்னன் அங்கே தங்கினான்

18. ஆச்சிரமத்தில் தங்கியிருந்த மன்னன் கண்ட காட்சி யாது?
    - தனது மகன் விறகுக் கட்டு சுமந்து கொண்டு ஆச்சிரமத்தை நோக்கி வருவதை கண்டான்
19. விறகுக் கட்டோடு வந்த மகனைக் கண்ட மன்னனின் மகன் எதை நினைத்தது?
    - நாட்டை ஆளவேண்டிய மகன் விறகை சுமக்கின்றானே என மிக வருந்தினான்
20. விறகைச்சுமந்து வந்த ராஜகுமாரன் முனிவரைப் பார்த்து என்ன கூறினான்?
    - "சுவாமி, என் அடுத்த பணி என்ன? " என்று கேட்டான்
21. "அடுத்த பணி என்ன "என ராஜகுமாரன் முனிவரிடம் கேட்டதற்கு முனிவர் என்ன கட்டளையிட்டார்?
    - "நம் ஆச்சிரமத்திற்கு முக்கிய விருந்தாளி வந்துள்ளார் அவருடைய இடத்தை சுத்தம் செய் வாசல் தெளி கோலம் இரு என்றார்"
22. முனிவர் "இடத்தை சுத்தம் செய் " என பணித்ததும் இளவரசன் என்ன செய்தான்?
    - இளவரசன் துடைப்பத்தை எடுத்துக் கொண்டு அரசன் தங்கியுள்ள இடத்தை அடைந்து தனது கடமையைச் செய்தான்
23. இளவரசன் சுத்தம் செய்த போது மன்னனின் மனநிலை எவ்வாறு இருந்தது?
    - செங்கோல் ஏந்தவேண்டிய கை துடைப்பத்தை ஏந்துவதா? மகனே துடைப்பத்தை கீழே போடு என உத்தரவிட்டார் தந்தை(மன்னன்)
24. "மகனே துடைப்பத்தை கீழே போடு " என தந்தை கூறியதும் இளவரசன் கூறியது என்ன?
    - "அரசே இப்போது தாங்கள் எங்கள் குருநாதரின் விருந்தினர். அதன் பின் தான் என் தந்தை. இப்போது இந்தப் பணியை செய்யச் சொன்னது என் குருவின் கட்டளை, அதனை மீற மாட்டேன் இங்கே என் குருவுக்கு நான் மாணவன் அவர் சொல் தான் வேதம், அவர் தான் என் இறைவன், எனவே தங்களைப் போன்ற அரசரும் ஆண்டியும் இங்கே ஒன்றுதான்" என்றான்
25. இளவரசனின் கூற்றைக் கேட்ட முனிவர் அரசனுக்கு கூறியது என்ன?
    - "அரசே, உங்கள் மகனுக்கு எல்லாப் பாடங்களும் நன்றாக தெரியும். இங்கே கற்ற மற்ற மாணவர்களில் இவன் தான் முதல்வன். அப்படி யார் ஒருவன் முதலாவதாக வருகின்றானோ அவனை மீண்டும் இறுதிப் பரிசோதனை செய்வேன். அதில் தேறினால் தான் அவனை வீட்டிற்கு அனுப்புவேன். அவனுக்கு உலக அலங்கில் மதிப்பும் மரியாதையும் கிட்டும் " என்றார்
26. இளவரசன் பற்றி முனிவர் தந்தைக்கு/ மன்னனுக்கு கூறியது என்ன?
    - அரசே இளவரசன் நான் வைத்த பரிசோதனையில் வெற்றி அடைந்துவிட்டான். உலகிலே சிறந்த குணம் பணிவு தான் அந்தப் பணிவு ஒருவனுக்கு இயல்பாகவே வந்துவிட்டால் அவனை யாரும் அசைக்க

முடியுர்த. இளவரசன் மனவுறுதி பெற்றுவிட்டான். அதாவது விவேகம் பணிவு பெற்றுவிட்டான் என கூறினார்

## ஆ.நன்றி மறவாமை

27. ஒரு மனிதன் செம்மையாக வாழ்வதற்கு தேவையான பண்பு எது?
    - நன்றி மறவாமை
28. நன்றி மறவாமை பற்றிக் கூறும் குறள் ஒன்று தருக.
    - “எந் நன்றி கொண்டார்க்கு உய்வுண்டாம் உய்வில்லை செயந்நன்றி கொண்ட மகற்கு”
29. நன்றி மறவாமை பற்றி கூறும் நூல்கள் எவை?
    - புராண இதிகாசங்கள்
    - சைவ இலக்கியங்கள்
30. நாம் முதலில் யாருக்கு நன்றி அறிதலை தெரிவிக்க வேண்டும்?
    - இறைவன்
    - பெற்றோர்
31. நன்றி மறவாமையை உணர்த்தும் கருத்துக்கள் எவை?
    - உப்பிட்டவரை உள்ளளவும் நினை
    - உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்யாதே
    - “நன்றி மறப்பது நன்றன்று……”
    - “தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக் கொள்வர்”
    - “காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மானப்பெரிது”
32. நாம் யாரை மதித்து நடக்க வேண்டும்?
    - பெற்றோர்
    - ஆசிரியர்கள்
    - பெரியோர்கள்
33. நன்றி மறவாமைக்கு சிறந்த எடுத்துக்காட்டானவர்கள் யாவர்?
    - கர்ணன்
    - கும்பகர்ணன்

## இ.நீதி,நேர்மை

01. “மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்” என யார் ? எதில் கூறியுள்ளார்?
    - கச்சியப்ப சிவாச்சாரியார்
    - கந்தபுராணத்தில்
02. “தன்னுயிர் போன் மன்னுயிரையும் ஓம்பும் வாழ்வு”எது?
    - சைவநீதி
03. “நீதி”என்பது யாது?

- நமக்கு எது துன்பம் என்று தோன்றுகின்றதோ அதனைப் பிறருக்கு நாம் செய்யக் கூடாது என்பது நீதி

04. சிவபெருமான் நீதியே வடிவானவர் என்பதற்கு மாணிக்க வாசகர் சுவாமிகள் எவ்வாறு கூறுகின்றார்?
    - "மாலும் அயனும் காணாத நீதியே"

05. நீதியின் தன்மை எத்தகையது?
    - இந்தப் பிரபஞ்சம் முழுவதும் செறிந்து காணப்படுகிறது
    - எல்லோர் கண்ணுக்கும் எளிதில் புலப்படாது

06. மமகாரங்கள் எவை?
    - "நான், எனது" என்பவை

07. நீதி யாருக்கு புலப்பட்டது?
    - "நான், எனது" என்னும் மமகாரங்கள் உள்ளவர்களுக்குப் புலப்படாது

08. இறையருளை எளிதில் எவ்வாறு பெற முடியும்?
    - அன்புள்ளவராகவும் பண்புள்ளவராகவும் நீதி நெறியில் நின்று வாழ்ந்தால் இறையருளினை எளிதில் பெற முடியும்

09. சோழவள நாட்டை ஆண்ட மன்னன் யார்?
    - அறபாயச் சோழன்

10. அறபாயச் சோழனின் தலைநகரம் எது?
    - திருவாதவூர்

11. அறபாயச் சோழன் நீதி நெறியில் சிறந்து வியங்கியமையால் எப்பெயர் பெற்றான்?
    - மனுநீதிச் சோழன்

12. அறபாயச் சோழனின் மகன் யார்?
    - சுந்தரச் சோழன் வீதிவிடங்கன்

13. வீதிவிடங்கன் கற்றவை எவை?
    - கல்வி, அரசர்களுக்குரிய படைக்கலப்பயிற்சி,யானையேற்றம்,குதிரையேற்றம், தேரேற்றம் என்பவற்றை கற்றுணர்ந்தான்

14. வீதிவிடங்கன் தேரில் எவ்வாறு உலாச் சென்றான்?
    - நண்பர்களின் தேர்கள் புடைசூழ்ந்து வர வீதியுலா சென்றான்

15. வீதிவிடங்கன் வீதியுலா சென்றபோது நிகழ்ந்தது என்ன?
    - எங்கிருந்தோ ஒரு பசுக்கன்று துள்ளிக்குதித்தோடி வந்து அரசிளங்குமரனின் தேர்ச் சக்கரத்தின் அடியில் அகப்பட்டு இறந்தது

16. கன்று இறந்ததும் தாய்ப்பசு செய்தது என்ன?
    - தாய்ப்பசு அலரித்துடித்து அரண்மனைக்குச் சென்று வாயிலில் கட்டித் தொங்கவிடப்பட்ட இதுவரை காலமும் அடிக்கப்படாத ஆராய்ச்சி மணியைத் தன் கொம்புகளால் அசைத்தது

17. மணியோசை கேட்ட மன்னன் என்ன செய்தான்?
    - அரியணையை விட்டெழுந்து அரண்மனை வாயிலுக்குச் சென்று கதறுகின்ற பசுவை நோக்கி நடந்தவற்றை கேட்டு இரங்கி வருந்தி ஏங்கினான்

18. மன்னனுக்கு அமைச்சர்கள் கூறிய ஆலோசனை என்ன?

- கோலதையால் ஏற்பட்ட பழிக்குச் செய்ய வேண்டிய பிராயச்சித்தங்களை கூறினார்

19. அமைச்சர்கள் ஆலோசனைக்கு மன்னன் எவ்வாறு மறுத்துரைத்தான்?
    - இப்பசு தன் கன்றை இழந்து தவிப்பது போல் நானும் எனது ஒரே மகனை இழப்பதுதான் இப் பசுக்கன்று கொலைக்கு நீதி முறையாகும்
20. மன்னன் அமைச்சர் ஒருவரை அழைத்து என்ன கூறினான்?
    - பசுக்கன்று இறந்த அதே வீதியில் இளவரசனை படுக்கச் செய்து அவன் மேல் தேரினை செலுத்தும் படி கட்டளையிட்டான்
21. மன்னன் இட்ட கட்டளையால் அமைச்சரது நிலை எவ்வாறு காணப்பட்டது?
    - அமைச்சர் அவ்வாறு செய்யாது தனது உயிரைப் போக்கினார்
22. மன்னன் எடுத்த இறுதிமுடிவு என்ன?
    - பசுக்கன்று இறந்த அதே வீதியில் படுக்கச் செய்து இளவரசனின் மலைபோன்ற மார்பில் தேரினைத் தானே செலுத்தினான்
23. நீதியைக் காப்பாற்ற மன்னன் எடுத்த தீர்மானத்தால் ஏற்பட்டது என்ன?
    - எம்பெருமானாகிய திருவாதவூர்ச் சிவபெருமானையே எழுந்தருளச் செய்துவிட்டது
24. இறைவன் அருளால் நடந்தது என்ன?
    - அரசிளங்குமரனும் அமைச்சரும் பசுக்கன்றும் உயிர்பெற்று எழுந்தது

## ஈ.பொறுமை

25. மனிதரிடம் காணப்படும் உத்தம பண்பு எது?
    - பொறுமை
26. பொறுமை உடையவர்க்கு வாழ்வில் எவையெல்லாம் கிடைக்கும்?
    - வெற்றியும் உயர்ந்த வாழ்வும் கிடைக்கும்
27. பொறுமை காத்த சமய நாயன்மார்கள் யாவர்?
    - திருநாவுக்கரசர்
    - திருஞானசம்பந்தர்
28. மகாபாரதத்தில் மிகவும் பொறுமையுள்ளவர் யார்?
    - தருமன்
29. எல்லோராலும் போற்றப்பட்ட அடியார் யார்?
    - ஏகநாதர்
30. ஏகநாதர் எங்கே நீராடினார்?
    - கோதாவாரி நதியில்
31. ஏகநாதரின் பொறுமையை சோதிக்க அவர் மீது பொறாமை கொண்டவன் என்ன செய்தான்?
    - நீராடிவிட்டு வந்தவர் மேல் பல தடவைகள் மாடியில் இருந்து எச்சிலை அவர் தலை மீது உமிழ்ந்தான்
32. அவனது செயலால் ஏகநாதர் என்ன செய்தார்?
    - மறுபடியும் மறுபடியும் கோதாவாரி நதியில் நீராடினார்

33. பொறாமை கொண்டவன் என்ன செய்தான்?

- ஏகநாதரின் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும் படி வேண்டினான்

34. ஏகநாதர் அம்மனிதனுக்கு கூறிய விடயம் யாது?

- அன்பனே! நீ முதலில் உன் அழுகையை நிறுத்து. நீ எனக்கு எந்தத் தீமையும் செய்யவில்லை. மாறாக நன்மையே செய்திருக்கின்றாய். உன் உதவியால் புனித நதியான கோதாவாரியில் ஒரே நாளில் நூற்றியெட்டு முறை நீராடும் பேறு எனக்குக் கிடைத்தது. இத்தகைய பேறு யாருக்குக் கிடைக்கும் என்றார்

35. பொறுமை பற்றிய பழமொழி யாது?

- பொறுத்தார் பூமி ஆள்வார்

## உ.சகோதரத்துவம்

36. விழுமியப் பண்புகளை கடைபிடிப்பதனால் ஏற்படும் நன்மைகள் எவை?

- மனித வாழ்வு செம்மையாகவும் ஒழுக்கமுள்ளதாகவும் அமைதி நிறைந்ததாகவும் காணப்படும்

37. சகோதரத்துவம் எப்போது தோன்றுகிறது?

- நாம் ஐக்கியமாகவும் ஒருவரை ஒருவர் ஏற்றத்தாழ்வின்றி மதிக்கும் போதும் அன்பினை பேணும் போதும் சகோதரத்துவம் பிறக்கின்றது

38. சகோதரத்துவத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக வியங்கியவர் யார்?

- இராமன்

39. இராமன் காட்டிற்கு எவ்வாறு சென்றான்?

- நாட்டைத் துறந்து மரவுரித்தரித்து தனது தேவியுடனும் தம்பி இலக்குவனோடும் பதினான்கு வருடங்கள் வனவாசஞ் செய்ய காட்டிற்கு இராமன் புறப்பட்டான்

40. இராமன் காட்டிற்குச் செல்லும் வழியில் யாரைச் சந்திக்கின்றான்?

- வேடுவத் தலைவனான குகனை சந்திக்கின்றான்

41. இராமனைக் கண்டதும் குகன் என்ன செய்தான்?

- இராமனது தரிசனம் கிடைத்ததும் அதனை உயர்ந்த பேறாக கருதினான். இராமனுக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்து மகிழ்ந்தான்

42. குகனின் பேரன்பைக் கண்ட இராமன் கூறியது என்ன?

- "இனி நாம் ஐவரானோம்" எனக் கூறி சகோதரப் பண்பை உணர்த்தினார்

43. இராமனின் சகோதரத்துவ சிறப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

- அரச குலத்தில் பிறந்த இராமன் தன் வாழ்வில் உயர்வு தாழ்வு பார்க்காத உத்தமன். இத்தகைய அன்புள்ளம் கொண்ட இராமன் வேடுவத் தலைவனான குகனையும் சக்ரீவனை தன் தந்தைக்கு, இவனும் ஒரு மகன் எனக் கொண்டமையும், சகோதரத்துவத்தின் மேன்மையையும் சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது

## ஊ.பஞ்சமாபாதகங்களை தவிர்த்தல்

44. பஞ்சமாபாதகங்கள் எவை?

- கொலை
- களவு
- கள் உண்ணல்
- பொய்
- காமம்

45. பஞ்சமாபாதகங்கள் பற்றி சைவநெறி கூறுவது யாது?

- பஞ்சமாபாதகங்களை மக்கள் கடைபிடிக்காது விலக்க வேண்டும்
- இவையாவும் தீவினைகளாகும்
- இத் தீவினைகளை செய்வதற்கு அஞ்ச வேண்டும்
- பஞ்சமாபாதகங்களை செய்வதால் பிறவிகள் தோறும் தீய பயனை அனுபவிக்க வேண்டும்

46. நாம் செய்யும் செயல்கள் பற்றிய நம்பிக்கை யாது?

- நாம் செய்யும் செயல்கள் சிந்தனை அனைத்தையும் எங்குமுள்ள இறைவன் கண்காணிக்கின்றான். இந்த உண்மையை உணர்ந்து கடவுள் மீது பக்தி கொண்டோர் தீவினைகளைத் தவிர்க்கும் ஆற்றலைப் பெறுகின்றனர்

47. ஒருவர் தனது வாழ்வில் துன்ப துயரங்களை எவ்வாறு தவிர்க்க முடியும்?

- ஒவ்வொருவரும் அறநெறி நின்று ஒழுக்கசீலர்களாக சமுதாயத்தில் வாழ்தல் மூலம் துன்ப,துயரங்களை தவிர்க்க முடியும்

## அலகுப் பரீட்சை 04

பகுதி – I

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. பின்வருவனவற்றுள் வாழ்வியல் நற்பண்புகளில் ஒன்றாக அமைவது?

I. நன்றிமறவாமை
II. கோபம் கொள்ளாமை
III. இன்முகம் காட்டல்
IV. இழிவு கொள்ளாமை

02. மனித நற்குணங்களில் தனி சிறந்தது எது?

I. உண்மை
II. நேர்மை
III. பணிவு
IV. கருணை

**கீறிட்ட இடங்களை நிரப்புக**

(அகங்காரம் அநபாயச் சோழன் சுந்தரச் சோழன் அன்பின்மை)

03. அறியாமையால் எமது இல்லத்தில்...................... ஏற்படுகிறது
04. திருவாரூரை தலைநகராகக் கொண்டு.....................மன்னன் ஆண்டு வந்தான்

**பின்வருவன சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக**

05. சிவபெருமான் நீதியே வடிவானவர் என மாணிக்கவாசகர் கூறுகின்றார் ( )
06. ஏகநாதர் சரயநதியில் நீராடினார் ( )

**பின்வருவனவற்றை தொடர்புபடுத்துக**

| | |
|---|---|
| 07. இராமன் | பொறுமை |
| 08. மமகாரங்கள் | மனுநீதி |
| 09. அநபாயச் சோழன் | நான் எனது |
| 10. தருமன் | குகன் |

### <u>பகுதி II</u>

01. வாழ்வியல் நற்பண்புகள் எவை?
02. அரசன் ஆச்சிரமத்தில் தங்கியிருந்த பொழுது முனிவரால் இராஜகுமாரனுக்கு இடப்பட்ட கட்டளைகள் யாவை?
03. வீதிவிடங்கன் வீதியுலா சென்றபோது நிகழ்ந்தது யாது?
04. ஏகநாதர் அவர் மீது பொறாமை கொண்ட மனிதருக்கு கூறிய விடயம் யாது?
05. இராமனின் சகோதரத்துவ சிறப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

# <u>(09) திருமுறைகள்</u>

01. திருமுறைகள் என்றால் என்ன?
- தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாக்கள் ஆகும்

02. திருமுறைகள் ஓதப்படும் இடங்கள் எவை?
- கோயில்கள்
- வீடு
- பாடசாலை

03. பஞ்சபுராணங்கள் எவை?
- தேவாரம்
- திருவாசகம்
- திருவிசைப்பா
- திருப்பல்லாண்டு
- பெரியபுராணம்

04. பஞ்சபுராணத்தை ஓதுவதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
- மனநிம்மதி, இறைபக்தி, ஆன்மீக உணர்வு என்பன ஏற்பட்டு எம் வாழ்வு மேன்னையடையும்

## <u>01.திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்</u>

05. மதுரையை ஆண்ட சமய அரசன் யார்?

- கூன்பாண்டியன்

06. சம்மந்தரால் மதம் மாற்றப்பட்ட கூன்பாண்டியன் எப்பெயர் பெற்றான்?

- நின்ற சீர்நெடுமாறன்

07. “விருது குன்றுமா….” என்ற தேவாரத்தைப் பாடியவர், தலம், பண், சந்தர்ப்பம் என்பவற்றைத் தருக

- பாடியவர் - திருஞானசம்பந்தர்
- தலம் -திருக்கேதீச்சரம்
- பண் - நட்டராகம்
- சந்தர்ப்பம் - திருஞானசம்பந்தர் இராமேஸ்வரத்தில் இருந்து திருக்கேதீச்சரத்தினை மனதால் வணங்கிப் பாடினார்

08. சம்பந்தருடன் இராமேஸ்வரத்தில் தங்கி இருந்தவர்கள் யாவர்?

- நின்ற சீர்நெடுமாறன்
- மங்கையர்க்கரசியார்(அரசி)
- குலச்சிறையார்(அமைச்சர்)

09. “விருது குன்றமா…..” எத்தனையாம் திருமுறை?

- இரண்டாந் திருமுறை

10. “விருது குன்றமா…..” என்ற தேவாரத்ததை வரிக்கிரமமாக எழுதுக

- திருச்சிற்றம்பலம்
  விருது குன்றமா மேருவில் நாணர
  வாஅன லெரியம்பாப்
  பொழுது மூவெயில் செற்றவன் பற்றிறின்
  றுதைபதி யெந்நாளும்
  கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
  பொழிலணி மாதோட்டம்
  கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
  கருவினை படையாவே
  திருச்சிற்றம்பலம்

11. “விருது குன்றமா…..” என்ற தேவாரத்தில் வரும் புராணக்கதை யாது?

- திரிபுரத்து அசுரர்களுடைய வெற்றி கெடும்படி பெரிய மேடு மலையை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகயும் கடும் நெருப்பை அம்பாகவும் கொண்டு போர்புரிந்து முப்புரங்களை படி அழித்தருளிய சிவபெருமான்

12. “நிரைகழ லவரம்…….” என்ற தேவாரத்தைப் பாடியவர், தலம், பண், சந்தர்ப்பம் என்பவற்றைத் தருக

- பாடியவர் -திருஞானசம்பந்தர்
- தலம் - திருக்கோணேச்சரம்
- பண் - புறநீர்மை

- சந்தர்ப்பம் - சம்பந்தர் இராமேஸ்வரம் என்ற தலத்தில் இருந்து இலங்கையிலுள்ள திருக்கோணேஸ்வரத்தில் எழுந்தருளியுள்ள இறைவனையும் கோயிலின் இயற்கைக் காட்சிகளையும் ஞானக் கண்களாற் கண்டு கசிந்துருகிப் பாடினார்

13. "நிரைகழ லவரம்….." என்ற தேவாரத்ததை வரிக்கிரமமாக எழுதுக
    - திருச்சிற்றம்பலம்
      நிரைகழ லவரம் சிலம்பொலி யலம்பு
      நிமலர்நீ நணிதிரு மேனி
      வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
      வடிவினர் கொடியணி விடையர்
      கரைகெழு சந்துங் காரகிற் கிளவு
      மளப்பருவ கனமணி வரன்றிக்
      குரை லோத நித்திலங் கொழிக்குங்
      கோணமா மலையமர்ந் தாரே
      திருச்சிற்றம்பலம்

14. "நிரைகழ லவரம்….." என்ற தேவாரத்தில் சிவனின் சிறப்பு யாது?
    - வீரக்கழலின் ஒலியோடு சிலம்பொலியும் கலந்து ஒலிக்கும் திருவடிகளையுடைய குற்றமில்லாத குணத்தினர், திருநீறு அணிந்த திருமேனியையும் உமாதேவியை இடப்பக்கத்திலும் கொண்டவர்

15. "நிரைகழ லவரம்….." எத்தனையாம் திருமுறை?
    - மூன்றாம் திருமுறை

## அலகுப் பரீட்சை 05

01. திருமுறைகள் பாடுவதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
02. பஞ்சபுராணங்கள் எவை?
03. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற இழத்து சிவாலயங்கள் எவை?
04. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் அற்புதங்களால் கவரப்பட்டு சைவத்திற்கு மாறிய மன்னன் யார்?
05. "விருது குன்றுமா….." "நிரைகழ லவரம்….." என்ற தேவாரங்களின் பண்களைத் தருக

## 02. திருநாவுக்கரசுநாயனார் - தேவாரம்

01. திருக்கைலாயக் காட்சியைக் கண்டு தரிசிக்க விரும்பியவர் யார்?
- திருநாவுக்கரசுநாயனார்

02. திருக்கைலாயக் காட்சியைக் காண நாவுக்கரசர் என்ன செய்தார்?

- நெடுந்தூரம் யாத்திரை செய்தார். அவர் உடம்பில் உள்ள சக்தி முழுவதும் நீங்கியது, பின் நடக்க இயலாது உருண்டார் உடம்பு தேயப் பெற்றமையினால், இளைத்து, செல்வதற்கு இயலாமல் இருந்தார்.

03. நாவுக்கரசர் முன் சிவபெருமான் எவ்வாறு காட்சியளித்தார்?

- ஒரு முனிவர் போன்று தோன்றினார்

04. முனிவரான சிவன் தடுக்க நாவுக்கரசர் என்ன கூறினார்?

- திருக்கைலாயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருக்கோலத்தைத் தரிசித்தாரின்றி அழித்து போகும் இவ்வுடம்பைக் கொண்டு திரும்பேன் என்றார்.

05. நாவுக்கரசரின் கூற்றைக் கேட்ட சிவபெருமான் என்ன செய்தார்?

- நாயனாரின் இளைப்பாற்றியைத் திருவையாற்றிலே கைலாயக் கொடுத்தருளினார்

06. "மாதர்ப் பிறைக் கள்ளி….." என்ற தேவாரத்தைப் பாடியவர், தலம், பண், சந்தர்ப்பம் என்பவற்றைத் தருக

- பாடியவர் : திருநாவுக்கரசர்
- தலம்: திருவையாறு
- பண்:காந்தபுரம்
- சந்தர்ப்பம் : நாவுக்கரசர் கைலாயக் காட்சியை திருவையாற்றிலே கண்டு தரிசித்து பாடியமை.

07. "மாதர்ப் பிறைக் கள்ளி….." என்ற தேவாரத்தில் சிவபெருமானின் சிறப்பு எத்தகையது?

- அழகு பொருந்திய பிறைச்சந்திரனை மாலை போற் சூடியவர் சிவபெருமான்

08. "மாதர்ப் பிறைக் கள்ளி….." என்ற தேவாரம் எத்தனையாம் திருமுறை?

- நான்காந் திருமுறை

09. மேலைக் கடம்பூரில் உள்ள திருக்கோயிலின் சிறப்பு யாது?

- தேர் வடிவமாகக்ச் சக்கரங்களோடு அமைக்கப்பட்ட சிறப்புக்குரியது

10. "நங்க டம்பனைப்…." என்ற தேவாரத்தைப் பாடியவர், தலம், பண், சந்தர்ப்பம் என்பவற்றைத் தருக

- பாடியவர் - திருநாவுக்கரசர்
- தலம் -திருக்கடம்பூர்
- பண் -காந்தாரம்
- சந்தர்ப்பம் - மேலைக் கடம்பூரிலுள்ள கோயிலையும் இறைவனையும் சிறப்பித்துப் பாடியமை

11. திருக்கடம்பூரிலுள்ள இறைவன் பெயர் என்ன?

- அமிர்தகடேசுவரர்

12. "நங்க டம்பனைப்…." என்ற தேவாரத்தில் உள்ள விடயங்கள் எவை?

- திருக்கடம்பூரில் எழுந்தருளியுள்ள இறைவன் அமிர்தகடேசுவரரின் பெருமைகள்
- தாசமார்க்கத்தின் சிறப்பு

13. நாவுக்கரசர் கடைபிடித்த மார்க்கம் எது?

- தாசமார்க்கம்

14. நாவுக்கரசரின் கூற்று யாது?

- "என் கடன் பணி செய்து கிடப்பதே"

15. கடம்பமாலையை அணியும் கடவுள் யார்?

- முருகக் கடவுள்

16. "நங்க டம்பனைப் பெற்றவள் ….." என்ற தேவாரத்தில் சிவபெருமானின் சிறப்பு யாது?

- கடம்ப மாலையை அணிந்த முருகக் கடவுளைப் பெற்ற உமா தேவியாரை தனது இடப்பாகத்தில் உடையவர், திருக்கடம்பூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்"

17. "நங்க டம்பனைப் பெற்றவள் ….." என்ற தேவாரத்தை வரிக்கிரமமாக எழுதுக

- திருச்சிற்றம்பலம்
  நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினை
  தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
  தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
  என்க மன்பணி செய்து கிடப்பதே
  திருச்சிற்றம்பலம்

**அலகுப் பரீட்சை 06**

01. திருநாவுக்கரசு நாயனார் எத்தலத்திலிருந்து திருக்கைலாயக் காட்சியைக் கண்டு தரிசித்தார்?
02. முனிவரான சிவன் தடுக்க நாவுக்கரசர் என்ன கூறினார்?
03. "மாதர்ப் பிறைக் கள்ளி….." என்ற தேவாரத்தில் சிவபெருமானின் சிறப்பு எத்தகையது?
04. மேலைக் கடம்பூரில் உள்ள திருக்கோயிலின் சிறப்பு யாது?
05. நாவுக்கரசர் கடைபிடித்த மார்க்கம் எது?

# <u>மாதிரிவினாத்தாள் - 01</u>

## தவணை முன்னோடிப் பரீட்சை

**தரம் - 07** **சைவநெறி** **நேரம் - 2மணி**

பகுதி – I

**பொருத்தமான விடையின் தெரிவு செய்து கோடிடுக.**

01. சைவ சமயத்தவர்களின் முழுமுதற் கடவுளாக விளங்குபவர்?

**1. சிவபெருமான் 2. விஸ்னு 3.விநாயகா 4.முருகன்**

2. திருச்சிராப்பள்ளி குன்றுடையானின் சிறப்பு பெயர்?
   1.கேதீச்சரநாதர் 2. தாயுமானவர் 3. கோணேசர் 4. சிதம்பரநாதர்
3. நவராத்திரி விரதத்தின் பத்தாம் நாளாகிய விஜயதசமியில் இடம்பெறுவது
   1. சோறூட்டல் 2.பெயர்சூட்டல் 3. காதுகுத்தல் 4. ஏடுதொடங்கல்
4. பாடசாலை ஒழுக்கமாக கருத முடியாதது?
   1. நேரத்திற்கு சமூகமளித்தல்
   2. பிராத்தனையில் ஈடுபடுதல்
   3. பாடவேளையில் கதைத்தல்
   4. ஆசிரியருக்கு மதிப்பளித்தல்
5. “உப்பிட்டவரை உள்ளளவும் நினை” என்ற சொற்றொடர் உணர்த்துவது?
   1. பணிவு 2. நேர்மை 3. நன்றி மறவாமை 4. சகோதரத்துவம்

**பின்வருவன சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக**

6. “மாலும் அயனும் காணாத நீதியே” என சிவனை மாணிக்கவாசகர் குறிப்பிட்டார் ( )
7. நீதியின் இருப்பிடமாக திகழ்ந்த அரசன் பாண்டியன் ஆவான் ( )
8. “இனி நாம் ஐவரானோம்” என இராமன் குகனைப் பார்த்து கூறினார் ( )
9. நாம் வாழ்வில் பஞ்சமாபாதகங்களை கடைபிடிக்கத் தேவையில்லை ( )
10. புதுமனைப் புகுதலை கிருவறப் பிரவேசம் என்றும் கூறுவர் ( )

**கீழே தரப்பட்ட சொற்களில் சலியான சொல்ல வைத்து இடைவெளியை நிரப்புக**

**(போகிப் பண்டிகை மங்களவாரம் மனையடி சாஸ்திரம் சைவத்தி கர்ணன் கும்பகர்ணன்)**

11. நன்றி மறவாமைக்கு எடுத்துக்காட்டாக……………..….,……………………. விளங்குவர்
12. தைப்பொங்கலுக்கு முதல்நாள்…………………… கொண்டாடப்படுகிறது.
13. செவ்வாய்க் கிழமையை…………………….. என அழைப்பர்
14. தன்னுயிர் போல் மன்னுயிரையும் ஓம்பும் வாழ்வு………………… ஆகும்
15. புதுமனை அமைத்தல் போன்ற பணிகளை…………………… கூறும் விதிகளுக்கமைய அமைத்தல் சாலச்சிறந்தது

**<u>தொடர்புபடுத்துக</u>**

| | |
|---|---|
| 16. குன்றுடையான் | திருநாவுக் கரசர் |
| 17. கேதீச்சரநாதர் | முருகண் |
| 18. “நிரைகழலவரம் சிலம்பொலி…….” | திருச்சிராப் பள்ளி |
| 19. கடம்பமாலை | திருக்கேதீச்சரம் |
| 20. தாசமார்க்கம் | திருக்கோணேஸ்வரம் |

(20*2= 40 புள்ளி)

## பகுதி II

முதலாம் இரண்டாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு விடை தருக

01. சுருக்கமான விடை தருக
1. தாயுமானவர் சுவாமி என அழைக்கப்பட்டஇறைவன் பெயர் யாது?
2. நவராத்திரி விரதத்தின் போது மாணவர்களிடம் வெளிக்கொணரப்படும் திறமைகள் 2 தருக.
3. பாடசாலையில் கடைபிடிக்கப்படும் ஒழுக்கங்கள் 2 தருக
4. வாழ்வியல் நற்பண்புகள் 2 தருக
5. நன்றி மறவாமை பற்றி உணர்த்தும் கூற்றுக்கள் 2 தருக
6. அநபாயசோழன் மகன் யார்?
7. ஏகநாதர் எத்தனை தடவைகள் ஆற்றில் நீராடினார்?
8. பஞ்சமாபாதகங்கள் எவை?
9. நாவுக்கரகரின் கூற்று யாது?
10. ஈழத்தில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் எவை?

(10*2=20 புள்ளி)

02. பின்வரும் தேவாரங்களில் ஒன்றினை வரிக்கிரமமாக எழுதி அதனைப் பாடியவர் தலம் பண் என்பவற்றைக் குறிப்பிடுக.
1. “விருது குன்றமா மேருவில்”
2. “நிரைகழ லவரம்…..”
3. “மாதர்ப் பிறைக் கள்ளி…..”
4. “நங்க டம்பனைப் பெற்றவள் …..”

03.

1. ரசவ சமயத்தவர்களின் கடவுள் பற்றிய நம்பிக்கைகள் 3 தருக.

2. மூதாட்டியின் இறை தொண்டு யாது?

3. தாயுமானசுவாமிகள் என்ற கதையில் இறைவனின் இயல்புகள் 3 தருக.

(15 புள்ளிகள்)

ஒழுக்கம் தொடர்பாக

04. 1. வகுப்பறையில் காட்சிப்படுத்தும் விடயங்கள் எவை?

2. நவராத்திரி விழாவின் போது பாடசாரையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எவை?

3. மாணவர்கள் பாடசாலையில் செய்யத்தகும் செயற்பாடுகள்ள 3 தருக

(15ள்ளிகள்)

05.1. பாடசாலைக்குள் நடைபெறும் செயற்பாடுகள் மூலம் மாணவர் அடையவேண்டிய நல்லொழுக்கம் 5 தருக

2. வாழ்வியல் நற்பண்புகள் எவை?
3. அறபாயச் சோழன் எடுத்த இறுதி முளவு என்ன?

(15 புள்ளிகள்)

06. 1. பஞ்சபுராணங்கள் எவை?
2. ஈழத்தில் பாடல் பெற்ற தலத்தையும் அத்தலம் மீது பாடியவர்களையும் தருக
3. "விருதுகுன்றமா…" என்ற தேவாலத்தில் வருகின்ற புராணகதையை தருக